DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.9**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ஸ்ரீவர்ஷினி |
| Father Name | : | சுரேஷ்பாபு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 8, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 9வது எதிரி ஆஜர் இல்லை. 9வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது கதவு எண்.352, துரைச்சாமி ரோடு, டிவிஎஸ் நகரில் எனது தாயாருடன் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோனவர் எனது தகப்பனார் ஆவார். **அ.சா.8** எனது தாயார் ஆவார். வழக்கு சம்பவ சமயத்தில் **அ.சா.1** மணிகண்டன் என்பவர் எங்கள் வீட்டில் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார். நான் படித்துகொண்டிருந்த போது எனது தகப்பனார் இறந்ததாக நான் கேள்விபட்டு, நானும், எனது தாயாரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். நான் சின்னபிள்ளையாக இருந்ததால் எனக்கு வழக்கு பற்றி தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்க வந்தார்கள், நான் என்ன சொன்னேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 29.01.2013ம் தேதி எனது அப்பா கொலைக்கானல் சென்றிருந்தார் என்றும், 31.01.2013ம் தேதி நான் பள்ளிக்கூடம் சென்றுவிட்டு மாலை 05.30 மணிக்கு எங்கள் வீட்டு டிரைவர் ராஜா பள்ளிக்கூடத்தில் இருந்து என்னை கூட்டி வந்தார் என்றும், வீட்டிற்கு வந்த போது அப்பா கொடைக்கானலில் இருந்து வீட்டிற்கு மதியம் 01.30 மணிக்கு வந்துவிட்டதாகவும், மாலை சுமார் 04.30 மணியை போல அப்பா யோகா & Company Officeக்கு போய்விட்டதாக அம்மா சொன்னார்கள் என்றும், அதன்பிறகு டிரைவர் ராஜா எல்லீஸ் நகருக்கு 07.00 மணிக்கு சென்று டியூசன் மிஸ் பாத்திமா ரீகன் அவர்களை வீட்டிற்கு கூட்டி வந்தார் என்றும், நான் வீட்டில் டியூசன் படித்துகொண்டு இருந்த போது, 07.50 மணிக்கு எனது அம்மா கூக்குரல் இட்டு அழுது வர்ஷினி அப்பாவை கொன்னுட்டாங்களே என்று சத்தம் போட்டார்கள் என்றும், நானும், எனது அம்மாவும் போய் அப்பா இறந்துகிடந்த இடத்திற்கு வந்து பார்த்தோம் என்றும், அப்பா உடம்பில் பல இடங்களில் வெட்டுகுத்து காயங்களுடன் குப்புற விழுந்து இறந்துகிடந்தார் என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.11 14:45:33 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.